In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : Spl.CC.2/2021

Deposition of P.W.6

****

Name திரு.பாலகிருஷ்ணன்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 11th day of July 2024.

**A1 to A4 present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது புளியங்குடி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு முறப்பநாடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 04.03.2015ம் தேதி மாலை 05.30 மணிக்கு நான் முறப்பநாடு காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது அங்கு வந்த வல்லநாடு, துணை மின்நிலைய உதவி மின்பொறியாளர் திரு.பாண்டியன் என்பவர் அளித்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.62/2015 u/s.136 (1)(a) I.E.Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அசல் புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை கனம் நீதித்துறை நடுவர், ஸ்ரீவைகுண்டம் அவர்களுக்கு அனுப்பினேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், விசாரணை நகலை விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு.பெர்னட் சேவியர் அவர்கள் பார்வைக்கும் வைத்தேன். அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4.

மேலும் என்னுடன் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு.பெர்னட் சேவியரின் கையொப்பம் எனக்கு தெரியும். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விசாரணை நகலை பெற்று காவல் ஆய்வாளர் பெர்னட் சேவியர் 04.03.2015ம் தேதி மாலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயகுமார், தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.5. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6.

பின்பு இந்த வழக்கின் சாட்சிகள் பாண்டியன், விஜயகுமார், தங்கராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இந்த வழக்கின் எதிரிகளை தேடி பக்கப்பட்டி to ஆழிக்குடி ரோட்டில் வைத்து சங்கர், த/பெ.மணி, கணேசன், த/பெ.முருகன் ஆகியோரை கைது செய்து சங்கர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதன் பேரில் சங்கர், ரவி, சுரேஷ், ஜெரால்டு ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேலும் இந்த வழக்கின் புலன் விசாரணையை முடித்து ஆய்வாளர் ஸ்டீபன் GR ஜோஸ் அவர்கள் 11.06.2016ம் தேதி வழக்கின் எதிரிகளான சங்கர், ரவி, சுரேஷ், ஜெரால்டு ஆகியோர் மீது u/s.136 (1)(a) IE Actன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ஆய்வாளர் பெர்னட் சேவியர் விசாரணையின் போது சாட்சிகள் தங்கராஜ் மற்றும் விஜயகுமார் ஆகியோர் ஆய்வாளரின் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியபடியே சொல்லியுள்ளார்கள்.

**குறுக்கு விசாரணை(1 முதல் 4 எதிரிகள் தரப்பில்) :**

இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

Sd/-K.Ayyappan,
**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**